Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.89**/2022**

Deposition of PW2 Witness for Defence

Defence Court

Name : Ravi Calling :

father Name : varadhan Village :

Age : Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 27th day of August 2024.

**(A1 to A3 are present)**

குறுக்கு விசாரணை

அ.சா.1 எனது மனைவி. இந்த வழக்கில் சாட்சியாக நிறுத்தப்பட்டுள்ள வினோத் என்பவர் அ,சா.1 ன் அக்கா பார்வதியின் மகன். எனது மகன் அசோக்குமாருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் அசோக்குமாருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது ்என்றும் அவர் மது அருந்திவிட்டு கடைகளில் தகராறு செய்து வந்தவர் என்றும் இந்த வழக்கிற்காக நான் அதை மாற்றி பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ தினத்தன்றே இரவு 10.00 - 10.30 மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள். அ.சா.3 அசோக்குமார் எனது வீட்டில் தகவல் சொல்லும் போது எனது மனைவியும், மகன்கள் நவீன், கார்த்திக் மற்றும் அசோக்குமார் ஆகியோர் இருந்தார்கள். நான் குளியளறையில் இருந்தேன். அவர்கள் சென்ற பின்னர், சுமார் முக்கால் மணி நேரம் கழித்து நான் சம்பவம் பற்றி தெரிந்து கொண்டேன். நான் தகவல் அறிந்த பின்னர் சம்பவ இடமான புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. எனது வீட்டிலிருந்து வெள்ளவேடு காவல் நிலையம் சுமார் 5 கிலோ மீட்டர் இருக்கும். நான் பைக்கில் அதன் பின்னர் காவல் நிலையத்திற்கு சென்றேன். நான் காவல் நிலையத்தினுள் செல்லவில்லை. நான் திரும்பி திருவள்ளூர் அரசு மருத்துவ மனைக்கு சென்றுவிட்டேன். வெள்ளவேடு காவல் நிலையத்திலிருந்து மருத்துவ மனைக்கு சம்பவ இடம் வழியாக தான் செல்லவேண்டும்

என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போலீசார் பாதுகாப்புக்காக பந்தோபஸ்த் போட்டு வைத்திருந்தார்களா என்றால் நான் அதை கவனிக்கவில்லை. நான் எனது மனைவி மற்றும் மகன்களிடம் தகவலை போன் செய்து ே கட்டேனா என்றால் என்னிடம் அப்போது போன் இல்லை. வீட்டிலேயே போனை விட்டு விட்டு சென்றிருந்தேன். அங்கிருந்து யாரிடமிருந்தோ அல்லது போலீசாரிடம் போன் வாங்கி எனது மனைவி மற்றும் மகன்களிடமிருந்து விவரங்களை அிறிய தொடர்பு கொண்டேனா என்றால் இல்லை. நான் சென்ற சாலை பூந்தமல்லியிலிருந்து திருவள்ளுர் செல்லும் நெடுஞ்சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் எ்போதும் போலீஸ் ரோந்து வாகனம் சென்று கொண்டிருக்கம் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. காவல் நிலையத்திலிருந்து மருத்துவ மனைக்கு செல்ல வேண்டும் என்றால் எனது வீட்டை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். ஆதலால் எனது வீட்டின் போனை எடுத்து மனைவி மற்றும் மகன்களை தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்கு நான் முயற்சித்தேனா என்றால் இல்லை. நான் திருவள்ளுர் பொது மருத்துவ மனைக்க செல்லும் போது இரவு 10.00 மணிக்கு மேல் இருக்கும். மருத்துவ மனைக்கு நான் சென்றவுடன் எனது மகன் அசோக்குமார் இறந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. மருத்துவ மனையிலிருந்து எனது மகன் நவீன் மற்றும் கார்திக்கிடமிருந்து போன் வாங்கி காவ்ல் நிலையத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. மருத்துவ மனையில் உள்ள புறக்காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார் கொடுக்க எனது மனைவியுடன் நான் செல்லவில்லை. எனது மனைவியுடன் எனது மகன் கார்திக் மற்றும் நவீன் காவல் நிலையம் சென்றனர். கார்திக் +12 வரையும் நவீன் கல்லுாரி படிப்பும் படித்துள்ளனர். நான் வேறு எங்கும் செல்லவில்லை வீட்டிற்கு வந்துவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கும் வரை போலீசாருக்கு சம்பவம் குறித்து தகவல் சென்னேனா என்றால் இல்லை. நான் எனது மனைவி மற்றும் எனது 3 மகன்களும் வீட்டில் இருந்த போது சதீஷ் எனது மகன் அசோக்குமாரை அழைத்து சென்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆம். " **சதீஷ் என்பவர் எனது உறவினரின் பெண்ணை காதல் திருமணம் செய்து கொண்டார். அந்த பெண் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டார். அது சம்மந்தமாக குற்ற வழக்கு, சதீஷின் பெற்றோர்கள் மீது, பதிவு ெ சய்யப்பட்டது. அந்த வழக்கில் சதீஷின் பெற்றோர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதன் பின்னர் சதீஷ் குடும்பத்திற்கும் எனது குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது. 12/12/2020 அன்று இரவு 09.00 மணிக்கு மேல் மதகன் மகன்**

**அசோக் குமார் என்பவர் எனது வீட்டிற்கு வந்து எங்களிடம், புதுசத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே எனது மகன் அசோக்குமார் வெட்டு காயம் பட்டு இரத்த வெள்ளத்தில் கிடப்பதாக கூறினார். உடனே நான், எனது மனைவி , எனது மற்ற இரண்டு மகன்ளான கார்த்திக் மற்றும் நவீன் ஆகியோர் அங்கு சென்றோம். அங்கே பார்த்த போது எனது மகன் அசோக் குமாரின் இடது விலாக்கு கீழ் பகுதியில் கத்தி காயம் ஏற்பட்டிருந்தது. அவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். உடனே நாங்கள் அவரை காரில் வைத்து திருவள்ளூர் அரசு மருத்துவ மனைக்க எடுத்து சென்றோம்** " என்று நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம். விழா கொண்டாடுவதற்காக எனது மகன் அசோக்குமார், எதிரிகளிடமிருந்து பணம் வசூலிக்க சென்ற போது அவர்கள் மறுத்ததால் அதன் பேரில் வன்மம் கொண்டு, அ.சா.3 அசோக்குமார் மற்றும் ஜெகன் ஆகியோர்ரின் ஆலோசனையில் பேரில் எதிரிகள் மீது இவ்வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மறு முதல் விசாரணை செய்யப்படுகிறார்</u>**

அ.சா.3 அசோக்குமார் எனது வீட்டிற்கு சம்பவம் குறித்து தகவல் அளிக்க வந்த போது எனது வீட்டில், எனது மனைவி மற்றும் எனது மகன்கள் கார்த்திக் மற்றும் ஆகியோர் இருந்தனர். அப்போது நான் குளியலறையில் இருந்தேன்.